## ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2024

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து, பெருந்தெருக்கள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.
இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பின் ஒரு பகுதியாக உண்டாக்குவதும், மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 202 கிலோமீற்றர் தேசிய வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் பாலங்களை புனரமைத்தல் மற்றும் விரிவுபடுத்துதல் மூலம் போக்குவரத்துத் துறையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வீதி வலையமைப்பு இணைப்பை மேம்படுத்துவதும் இச் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,121.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.46 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகை ரூபா 2,561.32 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2025 பெப்ரவரி 28 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மீதமாகவுள்ள 1064 தனியார் காணித்துண்டுகள் மீதான ரூபா 457.74 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய இழப்பீட்டிற்காக எவ்வித ஏற்பாடுகளும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, நடைமுறை வேலையானது அத் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 457.74 | மிகுதிக் காணிகள் காணி சுவீகரிப்பு செயன்முறையில் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இக் காணிததுண்டுகளின் உரிமையானது இறுதியாக்கப்பட்டிராததனால் மதிப்பீடு செய்யப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களை கையொப்பமிட முன்னர் உரிய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதனை கணக்காளர் உறுதி செய்ய வேண்டும். |
| (ஆ) | வியாபர மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்ட காணி இழப்பீட்டிற்கான வட்டி மற்றும் IPC கொடுப்பனவுகள் என்பன மீதான ஏற்பாடு ரூபா 100 மில்லியன் தொடர்பான உரிய வெளிப்படுத்தல்கள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | 100.00 | உடன்பட்டனர். நாங்கள் 2025 நிதிக் கூற்றில் உரிய தகவல்களை வெளிப்படுத்த தேவையான ஏற்பாடுகளை செய்வோம். | நிதிக் கூற்றுக்களை கையொப்பமிட முன்னர் உரிய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதனை கணக்காளர் உறுதி செய்ய வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 05 இன் பந்தி 43(அ) வின் பிரகாரம், ஒவ்வொறு நிதிநிலமைக் கூற்றிற்குமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை நிதிநிலமைக்கூற்று திகதியில் உள்ள முடிவடையும் வெளிநாட்டு நாணயமாற்று | - | வெளிநாட்டு கடன் மீதான நாணயமாற்று விகித சமநிலைச்சீராக்கங்கள் 2024.02.22 ஆம் திகதிய அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இல 3/2024 கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி 2024 ஆம் ஆண்டிற்காக | நிதிக் கூற்றுக்களை கையொப்பமிட முன்னர் உரிய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதனை கணக்காளர் உறுதி |

| | | | |
|---|---|---|---|
| | விகிதத்தில் மாற்றப்படல் வேண்டும். இருப்பினும், செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடனுடன் தொடர்புபட்ட சமநிலைச் சீராக்கங்கள் மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்ய வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| ஒப்பந்த நிபந்தனைகளின் 128 ஆம் உட்பிரிவு | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கையேற்றல் சான்றிதழை வழங்கும் திகதியில் ஒப்பந்ததாரரிடம் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், ஒருகொடவத்தை – அம்பத்தலே வீதியில் உள்ள 4/2 ஆம் இலக்க பாலத்தின் புனரமைப்பு தொடர்பாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கள ஆய்வுக்கூட உபகரணங்களுக்காக மொத்தமாக ரூபா 6 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலுத்தியுள்ளது. அளவைப்பட்டியலை இறுதியாக்க முன்னர், பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன விசேட ஒப்பந்த நிபந்தனையை மீளாய்வு செய்திருக்கவில்லை. எனவே அந்த சாதகமற்ற ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நலன்கள் மற்றும் செயற்திட்ட செலவை மீறுவதற்கு வழிவகுக்கும். | வீதி அபிவிருத்தி அதிகார சபையில் (RDA) காணப்படும் ஆய்வுகூட உபகரணங்கள் தேவைகளைவிட அதிகமாக உள்ளது. அதன்படி, கூறப்பட்ட உருப்படிகளானது செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி வழங்கப்படுகின்றன. இருப்பினும், எதிர்கால பெறுகைகளில் சாதகமற்ற ஒப்பந்த நிபந்தனைகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகள் அமுல்படுத்தலிற்கு முன்னர் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

**(அ) (i) காணி சுவீகரிப்பு**

| கூறு | செயற்பாடு | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் துண்டுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் துண்டுகள் | | |
| காணி சுவீகரிப்பு | RDA இற்கு உரித்துறுதி மாற்றம் | 2772 | 191 | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் இச் செயற்த்திட்டத்தின் மூலம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 38(அ) வின் கீழ் 2,772 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 820 காணித்துண்டுகளுக்காக ரூபா 290.26 மில்லியன் நட்டஈடு மற்றும் 266 காணித்துண்டுகளுக்காக ரூபா 53.26 மில்லியன் தொகை தாமத வட்டி என்பன செலுத்தப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டின் இறுதிவரை சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மீதமாகவுள்ள துண்டுகளிற்காக மதிப்பீட்டு செயன்முறையை பூர்த்திசெய்ய முடியாமலிருந்தமை காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியளவில் PMU வினால் 191 காணித்துண்டுகிற்காக மாத்திரமே காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 44 இன்படி உரிமையினை பெற முடியுமானதாகவிருந்தது. | மோசமான மேற்பார்வை காரணமாக காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் தாமதம். |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | உடன்பட்டனர். தற்போதய நிலைமை கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| **கணக்காய்வாளர் பரிந்துரைகள்** | காணி சுவீகரிப்புச் செயன்முறையானது காணி சுவீகரிப்பு திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டதா என்பதனை செயற்திட்டமானது உறுதி செய்ய வேண்டியதுடன் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் எழுத்துமூலமான அறிவுறுத்தல்களும் வழங்கப்படல் வேண்டும். |

**(ii)**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் தரவுத்தளத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைகளில் உரிய விபரங்கள் இல்லாததன் காரணமாக காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட காணிப் பிரிவின் விஸ்தரிப்பினை கணக்காய்வில் மீளாய்வு செய்ய முடியாமலிருந்தது. | சுவீகரிக்கப்பட்ட காணி விஸ்தரிப்புக்கள் 10(1) தீர்மானத்தின் ஆவணங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டியதுடன் அதனை தரவுத்தளத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணி சுவீகரிப்புக்களின் அனைத்து விபரங்களையும் உள்ளடக்குவதனூடாக ஓர் முறையான தரவுத்தளம் பராமரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) வட்டிக் கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாமத இழப்பீட்டிற்காக அடையாளப்படுத்தப்பட்ட மொத்த வட்டித்தொகையானது 2024 திசெம்பர் 31 வரையான பிரதேச செயலாளர் பிரிவின் உரிய காணி சுவீகரிப்பு செலவின் 12 தொடக்கம் 39 சதவீதம் வரையாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 1952 காணித்துண்டுகளிற்கான இழப்பீடு மீதமாக இருந்ததுடன் அதனால் வட்டிக்கிரயமானது எதிர்காலத்தில் அதிகரிக்கலாம். | இழப்பீடானது மொத்தம் 2,772 துண்டுகளில் 820 துண்டுகளிற்காக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், பிரதேச செயலக அலுவலகங்களில் பற்றாக்குறையான உத்தியோகத்தர்கள் காணப்பட்டமை மற்றும் கொடுப்பனவிற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு சில காணி உரிமையாளர்கள் தவறியிருந்தமை போன்றன காரணமாக இழப்பீட்டு செயன்முறையில் ஓர் தாமதம் காணப்படுகின்றது. | காணி சுவீகரிப்பு செயன்முறையானது முறையான செயல்நடைமுறை திட்டத்துடன் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் பாதீட்டு ஒதுக்கீடுகள் பெறப்படலும் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | BOQ தொகையினை மிஞ்சும் ஒப்பந்த விலைமாற்றங்களின் கொடுப்பனவிற்காக முறையான அனுமதி பெறப்படல் வேண்டும். இருப்பினும், ஒருகொடவத்த - அம்பத்தலே வீதியிலுள்ள 4/2 மற்றும் 3/1 ஆம் இலக்க பாலத்தின் நிர்மானத்திற்கான இரண்டு ஒப்பந்தங்களிற்கு முன் அனுமதி பெறப்படாமல் முறையே 70.12 மில்லியன் மற்றும் 101.81 மில்லியன் விலை மாற்றங்களானது BOQ தொகையினை மிஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதிகரித்த விலையேற்றங்கள் காரணமாக விலைமாற்றங்களானது அதிகரித்திருந்ததுடன் அதன்பிரகாரம் BOQ வினை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அனுமதிகளை பெற்றுக்கொள்ள விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டில் ஒருகொடவத்த - அம்பத்தலே வீதி 4/2 மற்றும் 3/1 ஆம் இலக்க பாலத்தின் நிர்மானத்திற்கான 22 IPC களின் பிரகாரம் முறையான அனுமதி பெறப்படாமல் BOQ வில் குறிப்பிடப்பட்டிருந்த அளவுகளை மிஞ்சிய அளவைகளிற்காக ரூபா 12.45 மில்லியன் கொடுப்பனவுகள் செய்யப்பட்டமை அடையாளப்படுத்தப்பட்டது. | உண்மையாக செய்துமுடிக்கப்பட்ட வேலைகளை எதிர்கொள்ள BOQ வினை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. BOQ வின் பட்டியல் இல 1 உடன் தொடர்புபட்ட அளவுகள் EOT காரணமாக விஞ்சியிருந்தது. | அனுமதிகளை பெற்றுக்கொள்ள விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (இ) | ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களிற்காக வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் ஓர் கால நீடிப்பிற்கு தகுதியுடயவராக இருந்தும், கூட்டு மொத்தம் ரூபா 6.96 மில்லியன் அலுவலக பராமரிப்பு, வீட்டு பராமரிப்பு, வாகனம் மற்றும் பொறியியலாளரின் ஏனைய செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் ஆய்வுகூட உபகரண பராமரிப்பு போன்றனவற்றிற்காக மேலதிகமாக ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட உருப்படியானது செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டதன் காரணமாக அதிகரித்தது, BOQ வினை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | EOT காரணமான மேலதிக செலவுகள் மீது விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | இச் செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட நான்கு வீதிகள் ஒப்பந்தப் பொது நிபந்தனைகளின் பிரிவு 10.1 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (RDA) கையளிக்கப்பட்டிருந்தும், 2024 திசெம்பர் 31 வரை பொல்ஹாவெல - கேகாலை வீதி மீதான 3/2 ஆம் இலக்க பாலத்தின் புனர்நிர்மானமானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிப்பதற்கு | பொல்ஹாவெல - கேகாலை வீதி மீதான 3/2 ஆம் இலக்க பாலம் தொடர்பான கையளித்தல் ஆவணங்களை அலுவலக களஞ்சியத்தில் தேடுவது கடினமாகும், மேலும் நிறைவேற்று பொறியியலாளரிடமிருந்து பிரதியினைப் பெற்றுக் | கையளித்தல் ஆவணங்களை வைத்துக் கொள்ள விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | (A005) பேராதனை – பதுளை – செங்கலடி வீதிப் பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் போதான பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரரால் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்படி வீதியை திருத்தம் செய்வதற்கும் பராமரிப்பதற்கும் 2019 காலப்பகுதின் போது ரூபா 7.71 மில்லியன் தொகையை செலவிட வேண்டியிருந்தது. செயற்திட்டமானது உடனடியாக இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிலிருந்து ஒப்பந்ததாரரிடமிருந்து மொத்த தொகையினையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஒப்பந்ததாரர் பின்னர் 10 தவணைகளில் அத் தொகையினை செலுத்த உடன்பட்டிருந்தும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரரினால் 05 தவணைகள் மாத்திரமே செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 4.21 மில்லியன் இன்னும் நிலுவையாக உள்ளது. மேற்படி தவறிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர் 2019.03.01 தொடக்கம் 2019.06.30 வரையான காலப்பகுதியின் போது வீதியினை பராமரிக்கவில்லை. எனவே, நிறைவேற்று பொறியியலாளர் (கடுகன்னாவ) அனைத்து பள்ளங்களினையும் சரிசெய்யவும், வடிகான்களை சுத்தம் செய்யவும் வீதியோர காடுகளை சுத்தம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளார். | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் கடமைகள் கவனமாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். மேலும் ஒப்பந்ததரரிடமிருந்து அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | முறையான அனுமதி இல்லாமல் ஒப்பந்த விலையானது விஞ்ச முடியாது எனினும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒருகொடவத்த – அம்பதல வீதியிலுள்ள 4/2 ஆம் இலக்க பாலம் மற்றும் 3/1 ஆம் இலக்க பாலம் என்பனவற்றின் நிர்மானத்தின் நடைமுறை வேலையானது ஒப்பந்த விலையினை ரூபா 34.79 மில்லியனினால் விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட தொகைகளானது ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் செய்யப்பட்ட ஒதுக்கங்களை உள்ளடக்கியதாகும். இருப்பினும், செலுத்தப்பட்ட தொகைகளானது ஒப்பந்த பெறுமதியை விஞ்சவில்லை, மேலும் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த விலைக்குள் நன்றாக உள்ளது. | அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஜுன் இலிருந்து ஆரம்பிக்கப்படும் பத்து வருடத்திற்கு மேலான செயற்திட்ட காலப்பகுதிக்கான மொத்த ஒதுக்கீடு ரூபா 7,092.77 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.21 மில்லியனில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனிலிருந்து ரூபா 5,552.75 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 37.25 மில்லியன் மற்றும் உள்நாட்டு நிதியிலிருந்து ரூபா 591.29 மில்லியன் போன்றவற்றை மாத்திரமே செயற்திட்டமானது பயன்படுத்தியுள்ளது. செயற்திட்ட ஆரம்ப முடிவுறுத்தல் திகதி 2016 திசெம்பர் 31 ஆக இருந்தும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஐ.அ.டொலர் 2.75 மில்லியன் பயன்படுத்தப்படாமல் மீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மிகுதிக் கடன் தொகையானது ஒருகொடவத்த – அம்பதல வீதியிலுள்ள 4/2 ஆம் இலக்க பாலத்தின் மீள்நிர்மானம் மற்றும் 3/1 ஆம் இலக்க பாலத்தின் விரிவாக்கல் என்பனவற்றிற்காக பயன்படுத்தப்பட்டது. மேலும் மீதமாகவுள்ள மீதியானது மஹரகம – பிலியந்தல பிரிவு (ஆ) (2+000 கி.மீ – 3+700 கி.மீ) இற்காக பயன்படுத்தப்படும், மேலும் பெறுகைக்கான கடன் வழங்குனர் ஒப்புதலானது தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்திட்டமானது முறையான செயல்நடவடிக்கைத்திட்டம் மற்றும் பாதீட்டினை தயாரிக்க வேண்டியதுடன் அதன் பிரகாரம் பொறுப்புக்களும் நிர்னயிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூபா 461.48 மில்லியனாகவிருந்நதுடன் அதில், மீளாய்வாண்டின் போது செயற்திட்டமானது ரூபா 344.14 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. எனவே, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 117.34 மில்லியன் அல்லது 25.43 சதவீதமான ஓர் சேமிப்பு காணப்பட்டிருந்தது. பாதீட்டு ஒதுக்கீடானது PMU வினால் ஓர் வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | 3/1 ஆம் இலக்க பாலம் மற்றும் 4/2 ஆம் இலக்க பாலம் போன்றவை பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக ஓர் சேமிப்பு காணப்படுகின்றது. 3/1 ஆம் இலக்க பாலத்தின் குழாய் அகற்றலில் தாமதம் காரணமாக வேலையானது உரிய நேரத்தில் பூர்த்திசெய்யப்படவில்லை. | கடன் நிதியானது வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2024 மார்ச் 16 ஆம் திகதிய கடித இல. DMS/7777/MFAP இன் பிரகாரம், 2024 திசெம்பர் 31 வரை நானாவித வெளிநாட்டு | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதவிகளை நிரப்ப 2025.03.06 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள | அனைத்து உத்தியோகத்தர் நியமனங்களும் MSD அனுமதியுடன் இணங்குகின்றதா என்பதனை பிரதான கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக அனுமதிக்கப்பட்ட ஆளனியினரின் எண்ணிக்கை 26 ஆகும். இருப்பினும், அனுமதிக்கப்பட்ட ஆளனியினருக்கு மேலதிகமாக ஓர் சிரேஸ்ட பொறியியலாளர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் ஓர் நிர்வாக உத்தியோகத்தர், இரண்டு எழுத்தாளர்கள் / தட்டெழுத்தாளர்கள், ஓர் அலுவலக உதவியாளர் மற்றும் ஓர் அலுவலக தொழிலாளி போன்றோர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | கடித இல. DMS/7777/MFAP இனால் மேலதிகமாக 06 பதவியினர் அனுமதிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். |

**3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/2019 இன் உப பிரிவு 9.3 இன் பிரகாரம், செயற்திட்டத்தின் வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும். இருப்பினும், இரண்டு கூட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்தது. | பல்வேறுபட்ட காரணங்களினால் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவில்லை. இருப்பினும், விடயங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டவை என்பன ஏனைய பொருத்தமான இடங்களில் கலந்துரையாடப்பட்டன. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இணங்குக. |
| (ஆ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், உள்ளககணக்காய்வு மீளாய்வுக்குழு நிறுவப்பட வேண்டியதுடன் குறைந்தது 04 கூட்டங்கள் வருடாந்தம் நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிலிருந்து எவ்வித கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் இல்லாததன் காரணமாக உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழு கூட்டம் நடாத்தப்படவில்லை. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இணங்குக. |